# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2313/34 - 2023 ජනවාරි මස 04 වැනි බදාදා - 2023.01.04

*2313/34 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹ ஆகிய நான், இதற்கான அட்டவணையின் (i) ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்டம் தொடர்பில், அட்டவணையின் (ii) ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை, 2023 சனவரி மாதம் 05 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் ஒரு வருட காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள்அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இக்கட்டளை மூலம் விதிக்கின்றேன்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2022 யூன் மாதம் 15 ஆந் திகதிய 2284/03 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சீனிக்கான (சுங்கத் தலைப்பு இலக்கம் 17.01) வெளியிடப்பட்ட கட்டளை மற்றும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2022 நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 2308/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி*

அறிவித்தலின் மூலம் யோகட் (இ. மு. குறியீட்டிலக்கம் 0403.10) மற்றும் ரின் மீன் (இ. மு. குறியீட்டிலக்கம் 1604.14 - ரியுனாங்கள், ஸ்கிப்ஜெக் மற்றும் ஜெனிட்டோ (சர்டா இனம்) ஆகியவற்றுக்காக வெளியிடப்பட்ட கட்டளைகள் ஆகியவை 2023 சனவரி மாதம் 05 ஆந் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் விதமாக மீளப் பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, சனவரி 04.

**அட்டவணை**

| (i) ஆம் நிரல் | | | | (ii) ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | |
| 1 | 04.03 | 0403.20 | யோகட் | கிலோகிராமிற்கு ரூபா. 2000/- |
| 2 | 16.04 | 1604.14 | ரியுனாங்கள், ஸ்கிப்ஜெக் மற்றும் ஜொனிட்டோ (சர்டா இனம்) | கிலோகிராமிற்கு ரூபா. 200/- |
| 3 | 17.01 | | திண்மையான உருவில் உள்ள கரும்பு வெல்லம் அல்லது பீற் வெல்லமும் இரசாயன முறையில் சுத்தமான சுக்கோறோஸ் வெல்லமும் | |
| | | | பிற: | |
| | | 1701.91 | மேலதிக மணமூட்டப்பட்டவை அல்லது நிறமூட்டப்பட்டவை: | |
| | | 1701.91.10 | துருவமாணியின் வாசிப்பானது, 99.7$^0$ இற்கு அதிகமாக அல்லது சமமாக இருத்தல் | கிலோகிராமிற்கு 25 சதம் |
| | | 1701.91.20 | துருவமாணியின் வாசிப்பானது, 99.5$^0$ இற்கு அதிகமாக அல்லது சமமாக மற்றும் 99.7$^0$ இற்கும் குறைவாக இருத்தல் | கிலோகிராமிற்கு 25 சதம் |
| | | 1701.99 | பிற: | |
| | | 1701.99.10 | துருவமாணியின் வாசிப்பனது, 99.7$^0$ இற்கு அதிகமாக அல்லது சமமாக அளவைக் கொண்ட கரும்பு வெல்லம் | கிலோகிராமிற்கு 25 சதம் |
| | | 1701.99.20 | துருவமாணியின் வாசிப்பானது, 99.5$^0$ இற்கு அதிகமாக அல்லது சமமாக மற்றும் 99.7$^0$ இற்கு குறைவான அளவைக் கொண்ட கரும்பு வெல்லம் | கிலோகிராமிற்கு 25 சதம் |
| | | 1701.99.30 | துருவமாணியின் வாசிப்பானது, 99.7$^0$ இற்கு அதிகமாக அல்லது சமமாக அளவைக் கொண்ட பீட் வெல்லம் | கிலோகிராமிற்கு 25 சதம் |
| | | 1701.99.40 | துருவமாணியின் வாசிப்பானது, 99.5$^0$ இற்கு அதிகமாக அல்லது சமமாக மற்றும் 99.7$^0$ இற்கு குறைவான அளவைக் கொண்ட பீட் வெல்லம் | கிலோகிராமிற்கு 25 சதம் |
| | | 1701.99.90 | பிற: | கிலோகிராமிற்கு 25 சதம் |

EOG 01 - 0066

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.